எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

ගාන්ධීයම

Gandheeyam

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam

Regd No.S.159 0f 25.08.1965

மலர் – 34 இதழ் 02 ஜனவரி – மார்ச் – 2023 விலை ரூபா 40/=

## பாரத நாடு பெற்றெடுத்த உத்தமர் மகாத்மா காந்தி




## 02-10-1869 - 30.01.1948

– க.செல்வக்குமாரன் M.A
ஓய்வு நிலை அதிபர், (கந்தரோடை)

### காந்தியடிகள் பிறந்த குஜராத் மாநிலத்தின் சிறப்பு

குஜராத்தில் புராதன நாகரிகம் செழிப்புற்றி ருந்ததை அகழ்வாராச்சிகளின் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.



இவை சிந்துநதி நாகரிககாலத்தை ஒத்ததாகவே காணப்படுகின்றன. குஜராத் மக்களின் கலாசாரம், பாரம்பரியம் என்பன அவர்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. இந்த மாநிலத்தின் புவியியல் நிலமைகள் கடும் வெப்பம், கடுங்குளிர் என்பன மக்களை கடின உழைப்பாளிகளாக்கியுள்ளன. இங்குள்ள தொழில்களுள் கைத்தொழில் முதலிடம் வகிக்கின்றது. மக்களுக்கு அதிக வருவாயை ஈட்டிக் கொடுக்கின்றது. கலாசார பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கட்டடக்கலை, ஆடைகள், அணிகலங்கள் சிறப்பாகத் தயாரிக்கப்ப டுகின்றன. உற்பத்திப் பொருட்கள் எல்லாம் அழகாகவும் கவர்ச்சியுடையதாகவும் காணப்படுவதால் இவை உலகையே கவர்ந்துள்ளன. தளபாடங்கள், அலங்காரப் பொருட்கள் மென்மையான மெத்தை விரிப்புக்கள் கண்களை கவரும் வண்ண வண்ண ஆடைகள் மேசை விரிப்புக்களும் இவற்றுள் அடங்குகின்றன. இங்குதான் தனித்துவமிக்க "பற்றோலா" சேலையும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த மாநிலத்தின் பிரதான விவசாய உற்பத்தியாக மாம்பழம் விளங்குகின்றது. மக்களின் பால் விகிதாசாரம் ஆண்:பெண்:919:1000 அரச சின்னம் மூன்றுதலைச்சிங்கம், சட்டசபை (யூனிகமரல் 182 ஆசனங்கள். பாராளுமன்றம் ராஜசபா 11 ஆசனங்கள் லோக்சபா 26 ஆசனங்கள் மக்களின் எழுத்தறிவு வீதம் 82.4 தேசிய விலங்கு ஆசிய இன சிங்கம் தேசிய பறவை Grater Flamingo (நாரை) தேசிய மரம் ஆலமரம். தேசிய பூவாக Marigold விளங்குகின்றது. மிக அழகான கடற்கரை துறை முகமாக சௌராஸ்திரா விளங்குகின்றது. சிறந்த உப்பு விளையும் கடற்கரையும் உள்ளது.

பொதுவாக கூறின் இயற்கை வனப்பு தெய்வீகமும், விடாமுயற்சியையும், கலை, கலாசார பாரம்பரியங்களை பேணும் மக்கள் வாழும் மாநிலமாக சிறந்து விளங்குகிறது. இத்தகைய பல சிறப்புக்களை கொண்ட மாநிலத்தில் மோகன்தாஸ் கரம்சந் காந்தி பிறந்தார்.

### காந்தியடிகளின் குடும்பம்

குஜராத்தில் கத்தியவார் பகுதி மிகவும் பழமை வாய்ந்த சிந்துவெளி நாகரிகத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது. கண்ணபிரான் போரை தவிர்ப்பதற்காக மதுரை நகரை விட்டு கத்தியவார் கடற்கரையில் துவாரகை கட்டினார். இதன் காரணமாக கத்திவாருக்கு ரணகோட் நாதர் (ரணம்–போர், கோட் – விட்டநாதர்– பெருமாள்) என்ற பெயராலும் அழைப்பர். போர் வேண்டாம், அன்பாக இருங்கள், பகைமை வேண்டாம் என்று கூறி வாழ்ந்து காட்டிய மகாத்மா காந்தியும் இப்பகுதியிலேயே பிறந்தார். காந்தியடிகள் இப்பகுதியில் உள்ள போபந்தர் எனும் இடத்தில் பிறந்தார். போபந்தருக்கு வரலாற்றுப் பெயர் சுதமாபுரி. குசேலருக்கு மற்றுமொரு பெயர் "சுதமா". கண்ணபிரான் சுதமாவிற்கு இந்த ஊரை வழங்கியதாகவும் கதையாக கூறப்படுகிறது.

காந்தியடிகளின் குடும்பத்தினர் வைசிக பிரிவின் "பணியா" மரபைச் சேர்ந்தவர்கள். பலசரக்கு வர்க்கத்தில் கைகோர்த்தவர்கள். வணிக அனுகுமுறைகளும் அதனூடாக பெற்ற நிஜவா அனுகுமுறைகளும், திறமைகளும் அப்பகுதி சிற்றரசுகளின் கவனத்தை ஈர்த்தன. மோகன்தாஸ் காந்தியின் பாட்டனார் உத்தமசந்காந்தியும் தந்தையாரான

(தொடர்ச்சி 2ம் பக்கம் பார்க்க..)

**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1ஆம் பக்கத் தொடர்ச்சி...**

கரம்சந்காந்தியும் சிற்றரசின் அழைப்பை ஏற்று முதன் மந்திரியாக பணியாற்றினார். தமது கடமைகளை சிறப்பாக நிறைவேற்றி யிருந்தனர்.


உத்தம்சந் காந்திக்கு முன்பு அவரின் மூன்று தலைமுறையினர் சுதேச சமஸ்தானங்களில் அதாவது அரச நிர்வாகத்தில் உள்துறை அமைச்சின் கடமைகளுக்குச் சமமான சேவைகளை மேற்கொண்டிருந்தனர்.




காந்தியடிகள் பிறந்த வீடு

காந்தியடிகள் பிறந்த அடுக்குமாடி வீடு அவரது கொப்பாட்டனாரான ஹர் ஜீவன் றைதாப் காந்தி அவர்களால் 17ஆம் நூற்றாண்டில் கொள்வனவு செய்யப்பட்டது. இந்தவீட்டில் கூட்டுக் குடும்பமாக மாமனரான துளசிதாஸ் காந்தி, பாட்டன் உத்தம்காந்தி உட்பட எல்லோரும் வசித்தனர். இந்த வீடு "கீர்த்தி மந்திர்" எனப்படுகிறது. ஒடுக்கமான மரப் பலகையினால் ஆக்கப்பட்ட மாடிப் படிகளைக் கொண்டது. காந்தியடிகள் பிறந்த அறையில் "சுவஸ்திக 卐" அடையாளத்தை அதன் சுவரில் இன்றும் காணமுடியும். இங்கு காந்தி நூலகம், பிரார்த்தனை மண்டபம் சிறுவர்பகுதியும் அலங்கரிக்கப்பட்ட கோபுரமும் உள்ளன. இக்கட்டடத்தை சூழ வீடுகளும் காணப்படுகின்றன. இதன் பின் புறக் கட்டடத்தில் தான் கஸ்தூரிபாய் பிறந்தார்.

உத்தம்சந் காந்திக்கு ஆறு புதல்வர்கள் இருந்தனர். ஐந்தாவது புதல்வரே கரம்சந் காந்தி (கபாகாநந்தி) இவர் நேர்மை, உறுதி, கருணை, அமைதி, ஆக்கத்திறன், நிர்வாகத்திறன் கொண்ட முதன்மந்திரியாக அப்பகுதி சமஸ்தானத்தில் பணியாற்றினார்கள். கரம்சந்காந்தி முதல் மூன்று தடவைகளிலும் திருமணம் நடைபெற்றாலும் ஒவ்வொரு மனைவியாரும் இறக்கும் பொது மறுதிருமணம் செய்திருந்தார். நான்காவது தடவையாக புத்தலிபாயை திருமணஞ் செய்தார். லட்சுமிதாஸ் (காளிதாஸ்) றலியர்பென் (கோகிபென்) கார் சன்டாஸ், மோகன்தாஸ் ஆகிய நால்வரும் இவரின் பிள்ளைகளாவர்.



தந்தை – கரம்சந்காந்தி தாய் – புத்தலிபாய்

## காந்தியின் பிறப்பு

### மோகனதாஸ் கரம்சந் காந்தி

இந்தியாவின் குஜாராத்திலுள்ள போர்பந்தின் கத்திவார் சமஸ்தானப் பகுதியில் 02.10.1869 ஆம் திகதி கரம்சந்காந்திக்கும் புத்தலி பாய்க்கும் நான்காவது (கடைசி) பிள்ளையாக பிறந்தார். இவரது பிறப்பு அக்காலத்தில் பல்வேறு பிரச்சனை களும், அமைதி யின்மை யும் நிலவிய போது ஒரு அவசிய தேவையாக விருந்தபடியால் இதை ஒரு அவதாரமாகக் கூட எண்ண முடிகிறது. பெற்றோரின் அரவணைப்பில் நல்ல சிந்தனைகள் ஊட்டப்பட்டன. சிறந்த செயற்பாடுகளுக்கு வழிகாட்டப்பட்டன. தாயார் மிகுந்த இறைபக்தி கொண்டவர்.



மோகனதாஸ் கரம்சந் காந்தி

– தொடரும்

(இக்கட்டுரையின் முதலாவது பகுதி கடந்த இதழில் வெளியாகியிருந்தது. இது இரண்டாவது பகுதியாகும்.)

# காந்திக்கிராமத்தில் இயற்கை வேளாண்மைப் பண்ணை

கிளிநொச்சி மாவட்டம் கோணாவில் காந்திக் கிராமத்தில் இயற்கை வேளாண்மைப் பண்ணை அமைக்கும் காந்திசேவா சங்கத்தின் முயற்சிக்கு இந்தியாவில் இருந்து இலங்கை வந்து நாட்டின் பல பகுதிகளிலும் இயற்கை வேளாண்மை தொடர்பான பயிற்சிப்பட்டறைகளை நடத்திய தமிழ்நாட்டைச் சேர்ந்த பாமயன் தலைமையிலான குழுவினர் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளனர். எமது சங்கத் தலைவருடனான கலந்துரையாடலின் பின் அவர்கள் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு உதவுவது என்று கருத்து வெளியிட்டனர். இயற்கை வேளாண்மை மூலம் இயற்கைக்கு பாதிப்பு அற்ற விதத்தில் சூழல் மாசுபடாது உற்பத்தியை மேற்கொள்ள முடியும். மனிதனின் ஆரோக்கியத்திற்கு உகந்த வெளியீடுகளையும் பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

எனது வாழ்க்கையே எனது செய்தி

காந்தி ஆண்டு 153, ஜனவரி - மார்ச் 2023




"எவன் ஒருவன் தனக்குத்தானே மனக்கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிறானோ, அவனே சுதந்திர மனிதனாவான்"

-மகாத்மா காந்தி-

## உலக விடுதலைப் போராளியின் 75 ஆவது நினைவு தினம்

1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி கோட்சே என்கின்ற இந்துத்துவ துப்பாக்கிதாரியின் குண்டுக்கு இலக்காகி அகிம்சா மூர்த்தி அண்ணல் காந்தி மண்ணிலே சரிந்தார். ஆம் இன்று நாம் அவரின் 75ஆவது இறந்த தின நினைவு நாளை நினைவு கூர்ந்து கொண்டிருக்கிறோம். அவர் எமக்கு எவற்றை விட்டுச் சென்றார். தனது வாழ்க்கை முறையை செய்தியாக்கிச் சென்றார். இன்று காந்தீயம் பேசப்படுகின்றதென்றால் உலக விடுதலைப் போராளிகளில் உச்சத்தில் வைத்துப் போற்றப்படும் காந்திஜியின் கருத்துக்கள் எக்காலத்திற்கும் அனைத்து மனிதர்களுக்கும் பொருந்தக்கூடியனவாக இருக்கின்றன என்பதா லாகும்.

காந்தியின் இந்திய சுதந்திர விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் ஈழத்திலும் எதிரொலித்தது. இங்கும் காந்தியவாதிகள் பலர் அக்காலகட்டத்தில் உருவானார்கள். காந்தியின் புகைப்படங்களை வீட்டுச் சுவர்களில் மாட்டி அவரை கடவுளாக மக்கள் வழிபட்டார்கள். அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் முதலாவது தலைவர் திரு வறன்டி பேரின்பநாயகம் தலைமையிலான காந்திய அன்பர்கள் 1927 ஆம் ஆண்டு காந்தியை இலங்கைக்கு அழைத்து வந்து கதர் இயக்கத்திற்கு பலம் சேர்த்தார்கள். சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் காந்தியின் பெயரில் சமூக நிறுவனங்களை உருவாக்கி அவரை நினைவு கூரத் தொடங்கினார்கள். காந்திசேவா சங்கம் காந்தியக் கொள்கைகளை முன்னிறுத்தி மாவட்டங்கள் தோறும் செயற்படத்தொடங்கியது. 1969 ஆம் ஆண்டு காந்தி நூற்றாண்டு விழாவும் 2019 ஆம் ஆண்டு 150 ஆவது ஜயந்தி தினமும் விமர்சையாக கொண்டாடப்பட்டன.

ஒவ்வோர் ஆண்டும் இந்தியத்தூதரகம் காந்தி ஜெயந்தியையும் (அக்டோபர் 2), சிரார்த்த தினத்தையும் (ஜனவரி 30) கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் அனுஷ்டித்து வருகின்றது. இலங்கை இந்திய கலைஞர்களைக் கொண்டு நிகழ்வுகளை ஏற்பாடு செய்து இரு நாடுகளுக்குமிடையே கலாசார உறவுப்பாலத்தை ஏற்படுத்தி வருகின்றது. காந்திசேவா சங்கத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டக்கிளைகள் அந்தந்த மாவட்டங்களில் காந்தி நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றன. மலையகத்தில் மகாத்மா காந்தி சபாவின் ஏற்பாட்டில் காந்தியை நினைவு கூர்ந்து கட்டுரைப்போட்டிகளும், இதர நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு குறிப்பாக தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் காந்தி நினைவு கூரப்படுவதென்பது சம உரிமை கேட்டு நிற்கும் இனத்திற்கு ஒரு பெரும் பலமாகும். ஆயுதப் போராட்டத்தாலோ வன்முறையாலோ பெற்றுக் கொள்ள முடியாத விடுதலையை அகிம்சை ரீதியான போராட்டத்தின் மூலம் பெறலாம் என்று நம்புவது இன விடுதலை வேண்டி நிற்கும் போராட்டங்களுக்கு வலுச்சேர்ப்பதாகும்.

அகிம்சைவாதியான காந்தி வன்முறை மூலம் சுட்டுக்கொல்லப்பட்டதை உலகில் பெரும்பான் மையான மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எதிரியையும் மன்னிக்கும் மனப்பான் மையை கற்றுத்தந்தவர் காந்தியடிகள். அண்ணலின் தியாகம் என்றும் மறக்கப்படாது. இந்த உலகு உள்ளவரை காந்தியமே மனிதன் திருந்துவதற்கான ஒரே மார்க்கமாக விளங்கப்போகின்றது என்பது உறுதி.


எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி

ஆசிரியர்.


**அமரர் திருமதி கங்காதரதேவி மதிவதனசேகரம் அவர்களின் 5ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 08.01.2023ஆம் திகதி அன்னாரின் குடும்பத்தினரால் காந்தி நிலைய சிறுவர் இல்லத்தில் விசேட உணவு வழங்கப்பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாட்டி சரசுவதி தம்பிப்பிள்ளை அம்மாவின் காலம் காந்தி சேவா சங்கத்தின் பொற்காலம்

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி, ஆசிரியர்.



## அமரர் சரசுவதி அம்மையாரின் முதுமைக்காலத் தோற்றங்கள்

யுத்தம் மற்றும் நாட்டின் சூழ்நிலைகளால் இயங்காதிருந்த சங்கத்திற்கு மீண்டும் புத்துயிர் அளித்து யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு செயற்படுத்துவதற்கு காரணகர்த்தாவாக விளங்கியவர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து வரும் திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்கள். அவருடைய சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுத்து சங்கத்தின் இருப்பிற்கு தோன்றா துணையாக நின்றவர் அவரின் துணைவியார் சரசுவதி அம்மையார்.

2004 ஆம் ஆண்டு சங்கத்தின் மீளமைப்புக் கூட்டம் தொடக்கம் நிர்வாக சபைக் கூட்டங்களையும் வரை நடாத்துவதற்கு இடம்தந்து உதவியது கந்தர்மடத்தில் அமைந்துள்ள சிவகுருநாதபீடம் (வேதாந்தமடம்) இன்று சமாதியடைந்து விட்ட ஸ்வாமி சோமாஸ்கந்தவேள் அவர்கள் எந்த அமைப்பின் தேவைக்கும் கொடுக்க விரும்பாத மண்டபத்தை காந்தி சேவா சங்கத்தின் பயன்பாட்டுக்காகத் தந்துதவினார். திரு.திருமதி தம்பிப்பிள்ளை தம்பதியினரில் ஸ்வாமி வைத்திருந்த மரியாதையே-மதிப்பே இதற்கான காரணமாகும். திருவாளர் தம்பிப்பிள்ளை அவர்களின் காந்தியக் கொள்கைகளால் கவரப்பட்ட யான சங்கத்தில் இணைந்து செயற்பட ஆரம்பித்தும் இக்காலப்பகுதியிலாகும். சங்கத்தில் உறுப்பினராக இணைவதற்கு முன்பே தொல்பொருள் சேகரிப்பாளர் "கலைஞானி யாழ்ப்பாணம்" மூலமாக ஸ்வாமியுடனான அறிமுகம் எனக்கு ஏற்பட்டிருந்தது. சங்கத்தின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டிய சோமாஸ்கந்தவேள் சுவாமிகளுக்கு அகில இலங்கை காந்தி சேவா சங்கம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது. சுவாமிகளுடன் தொடர்பைப் பேணி வந்த சபாரத்தினம் மாஸ்டர் (நாரத்தனையூர் ஆ.சபாரத்தினம் ஓய்வு நிலை அதிபர்) அவர்கள் சங்கத்தின் அமைப்புப் பணிகளுக்கு உதவி வந்தார். திரு தம்பிப்பிள்ளை ஐயா அவர்கள் பழைய உறுப்பினர்களை ஒன்றிணைத்து நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி நிர்வாக சபைக்கு தலைமை தாங்கினார். இவ்வனைத்து செயற்பாடுகளுக்கும் மாலையில் பூவைத் தொடுத்திருக்கும் நார்போல சரசுவதி அம்மையார் இருந்து வந்தார். காந்திவிழாக்கள், சர்வோதய கருத்தரங்கம், காந்தீயம் அறிமுகவிழா, புத்தகவெளியீடு என்று எல்லா நிகழ்வுகளுக்கும் எமக்கு ஊக்குவிப்பை நல்கி விழாக்கள் சிறக்க உதவியவர் சரசுவதி அம்மா. யாழ்ப்பாணத்தில் அவர்களுடைய இல்லங்களே எமது அலுவலகமாக இயங்கி வந்தன. அலுவலக நிர்வாகப் பொறுப்பை என்னிடம் வழங்கியிருந்தார்கள். அலுவலகத்திற்கு வரும் அங்கத்தவர்களுக்கு தானே தேநீர் தயாரித்து வழங்குவார் அம்மையார். இனம், மதம், பிரதேசம், ஜாதி வேறுபாடு பார்க்காது அனைவருடனும் இன்முகம் காட்டி அரவணைப்பது இந்த மூத்த காந்தியத் தம்பதிகளின் பண்பாடு. காந்தியக் கொள்கையே அவர்களின் மூச்சு. காந்திய சிந்தனையே அவர்களின் பேச்சில் எப்போதும் வெளிப்படும்.

கொழும்பிலும் சங்கத்தை வலுப்படுத்துவதில் அவர்கள் அக்கறை காட்டினார்கள். அங்கு நடைபெற்ற காந்திய சிந்தனை கருத்தரங்குகளுக்கு கோ.சி.வேலாயுதம் (ஓய்வு நிலைகல்விப்பணிப்பாளர், சிறிதுகாலம் "வலம்புரி" நாளேட்டின் ஆசிரியராக இருந்தவர். இன்று அமரராகிவிட்டார்.) பேராசிரியர் சு.மோகனதாஸ் (முன்னைநாள் துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம், இன்றைய வேந்தர் வவுனியா பல்கலைக்கழகம்) வி.ஜி.தங்கவேல் (அறவழிப் போராட்டக்குழு, காந்திய இயக்கத்தின் அமைப்பாளர்), ஆ.வடிவேலு (ஓய்வுநிலை அதிபர், காந்திசேவா சங்கத்தின் தலைவராக இருந்தவர்) ஆகியோரை ஒன்றிணைத்து கருத்தரங்குகளை ஒழுங்கு செய்ததோடு இந்தியாவில் இருந்து காலத்திற்குக் காலம் காந்திய அமைப்பின் பிரதிநிதிகள், இயற்கை வேளாண்மை நிபுணர்கள், சர்வோதய இலக்கிய பண்ணையின் பிரமுகர்கள் ஆகியோரை வரவழைத்து கூட்டங்களை ஒழுங்கு செய்ததில் தம்பிப்பிள்ளை ஐயாவிற்கு வலது கரமாக செயற்பட்டவர் சரசவதி அம்மையார் என்றால் அது மிகையல்ல.

2009 ஆம் ஆண்டு இலங்கையின் வன்னி மாவட்டத்தில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் இடம்பெயர்ந்து சுமார் மூன்றரை இலட்சம் மக்கள் வவுனியா மாவட்டம் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவு மெனிக்பாம் நிவாரணக்கிராமத்தில் தங்கியிருந்தார்கள். யான் பணி நிமித்தம் அங்கு தங்கியிருந்த காலத்தில் என் மூலமாக சரசுவதி அம்மா, முகாமிலிருந்த தமது கிராம மக்களுக்கு பல உதவிகளைப் புரிந்தார்கள். அவர்களின் நலனில் அக்கறை

(தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4ஆம் பக்கத் தொடர்ச்சி...

கொண்டு கடிதம் மூலமாக அவர்களுடன் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறினார்கள். விரைவில் நீங்கள் உங்கள் சொந்த ஊர் திரும்புவீர்கள் என்ற நம்பிக்கை வழங்கினார்கள். இது அவரின் மனிதாபிமானத்தையும் இரக்க சிந்தனையையும் எடுத்துக் காட்டும் ஒரு சந்தர்ப்பமாகும்.

2011 ஆம் ஆண்டு அம்மையார் எமது சங்க உறுப்பினர்களுடன் மதுரையில் நடைபெற்ற அகில இந்திய சர்வோதய மாநாட்டுக்குச் சென்றார்கள். அங்கு பல காந்தியப் பெரியார்களைச் சந்தித்ததோடு அவர்களை இலங்கைக்கும் வரவழைத்து பெருமை சேர்த்தார்கள். திரு.மாரியப்பன் (வழக்கறிஞர், தலைவர் சர்வோதய இலக்கியப்பண்ணை), திரு.க.மு.நடராஜன் (ஆசிரியர் சர்வோதயம் மலர்கிறது), திரு.மூ.சி.தேவதாஸ் காந்தி (இணைச்செயலாளர் இயற்கை மருத்துவ சங்கம், யோகக்கலை ஆசான்), திரு இராஜேந்திரன் (செயலாளர், தமிழ்நாடு சர்வோதய மண்டல்) போன்றவர்கள் அவ்வாறு ஈழம் வருகை தந்தவர்களில் முக்கியமானவர்கள். திரு தேவதாஸ் காந்தி அவர்கள் (மதுரை தேனீ மாவட்டம்) இலங்கையில் சுமார் இரண்டு வருட காலம் தங்கியிருந்து அகில இலங்கை காந்தி சேவா சங்கம் கிளிநொச்சியில் நடத்தி வரும் காந்தி நிலையம் – சிறுவர் இல்லத்தில் சிறுவர்களுக்கு அறநெறி சார்ந்த பயிற்சிகளை வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான பணிகள் சிறப்புற நடைபெறுவதற்கு கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என்று சோ.க.த ஐயாவோடு சளைக்காது பயணங்கள் மேற்கொண்டு வேலைகளை சோர்வின்றி மன மகிழ்வோடு அம்மா செய்தமை இன்றும் எம் மனதில் நிழலாடுகின்றது.

திரு.ராஜேந்திரன் மற்றும் திரு தேவதாஸ் காந்தி ஐயா அவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்த போது பூநகரி கிராஞ்சி பிருந்தாவனம் தோட்டத்தை (இன்று "மகாத்மா காந்தி ஆசிரமம்") எல்லோரும் ஒன்றாக பார்வையிட்டதும் இரவு திரு ந.சிவகரன் (காந்தி சேவா சங்கத்தின் தலைவராக இருந்தவர், யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்) அவர்களின் நீர்வேலி இல்லத்தில் இரவு விருந்து உண்டதும் மறக்கமுடியாத நிகழ்வுகள். இந்த எல்லா நிகழ்வுகளிலும் அம்மாவின் பங்கேற்பும் எமக்கு அளித்த ஊக்குவிப்பும் எம்மை மென்மேலும் காந்தியப்பணி செய்யத்தூண்டின.

இந்திய மண்ணிலிருந்து சங்கம் சார்பில் அறிஞர்களை இங்கு வரவழைப்பதில் திரு தம்பிப்பிள்ளை நந்திவர்மன் அவர்களின் சேவை பெரிதும் பாராட்டப்பட வேண்டியது. அங்கிருந்து வருபவர்களுக்கான போக்குவரத்து, உபசரிப்புக்கள். தங்குமிடம் என எல்லா வேண்டிய காரியங்களையும் அவரே செய்து முடிப்பார். சரசுவதி அம்மா நோய்வாய்ப்படுவதற்கு சில காலங்களுக்கு முன்னர் திரு நந்திவர்மன் இந்தியாவிலிருந்து ஓதுவார் மூர்த்திகளை வரவழைத்து நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் திருவாசக முற்றோதலை நடத்தினார். அதில் அம்மாவும் கலந்து சிறப்பித்தமையும் சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் நிகழ்வுக்கு தலைமை தாங்கியமையும் இன்றும் மனக் கண்முன் நிற்கின்றன. சித்தார்த்த குமாரன், கௌதம புத்தர் நிலையை அடைவதற்கு காரணமாக அமைந்த மூப்பு, பிணி, சாக்காடு என்ற வீதியில் கண்ட காட்சிக்கு யாரும் விதிவிலக்கல்ல. அம்மா கடுமையாக நோய்வாய்ப்பட்டு நொதேன் சென்றல் வைத்தியசாலையில் இருக்கிறார் என்ற தகவல் அவர்களின் பெறாமகன் திரு ந.கணேசமூர்த்தி மூலம் கிடைத்து சிவகரனும் யானும் சென்று பார்த்தோம். பின்னர் அவர்கள் கிராஞ்சி திரும்பி நிலையில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அங்கும் சென்று பார்வையிட்டேன். தம்பிப்பிள்ளை ஐயாவே அம்மாவுடன் கூட இருந்து ஆறுதல் கூறி கவனித்தும் வந்தார். பின்னர் கொழும்பில் சிகிச்சை செய்த பொழுது சிகிச்சை பயனளியாது போகவே அம்மாவின் உயிர் உடலை விட்டு பிரிந்தது. 2019 ஏப்ரல் 21 கொழும்பில் பயங்கரவாதத் தாக்குதல் நடந்த நாளில் அம்மையாரின் புகழுடல் அக்னியுடன் கலந்தது. அவரின் காந்தியப்பணி தொடர புரட்சியில் பூத்த காந்திய மலர்களாக நாங்கள் இன்று களத்தில்.

**அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக ஓம் சாந்தி!!!**

## இயற்கை விவசாய பயிற்சி பட்டறை

இயற்கை விவசாயம் தொடர்பாக இந்தியாவில் இருந்து வருகை தந்த விவசாய விஞ்ஞானிகளான பாமயன்,சுந்தரமாயன் மற்றும் கனடாவிலிருந்து வருகை தந்த நவஜீவன் ஆகியோரினால் கிளிநொச்சி அறிவியல் நகரில் இயற்கை விவசாயம் சம்பந்தமான விரிவுரைகள் அண்மையில் நடைபெற்றது.

மேலும் யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் இவ் மூவரினாலும் மூன்று நாட்கள் தற்சார்பு விவசாயம் தொடர்பான வகுப்புக்கள் நடாத்தப்பட்ட போது இதில் வெவ்வேறு மாவட்டங்களிலிருந்தும் பலர் வருகை தந்திருந்தனர்.அங்கு பயிர்களுக்கு ஏற்படும் நோய்கள் மற்றும் பாதிப்புக்கள் பற்றியும் அதை நிவர்த்தி தெல்லிப்பளையிலுள்ள தனியார் பண்ணை ஒன்று காண்பிக்க ப்பட்டு கரைசல்கள் தயாரிக்கும் முறைகள் மற்றும் கூட்டுப்பசளை தயாரிப்பதற்கான முறைகள் என்பன செயன்முறை மூலமான விரிவுரையாக நிகழ்த்தப்பட்டது.

தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்பட்டதுடன் வகுப்பில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. மேலும் கிளிநொச்சி பரந்தன் பகுதியில் விவசாயப் பயிர்களுக்கு பசளையை செயற்கை முறையான "டிரோன்" மூலமாக பசளையை தெளிக்கும் முறைமையினை செய்கை முறை மூலமாகவும் விரிவுரைகள் மூலமாகவும் விளக்கப்பட்டது. "டிரோனின்" நன்மை தீமைகளும் தெளிவுபடுத்தப்பட்டது.

பாஸ்கரன் டிலக்சன், கிராஞ்சி, பூநகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளராக மகாத்மா காந்தி



## இலண்டனில் பத்திரிகைத் துறையில் ஈடுபடுதல்

சட்டக் கல்வியைக் கற்று பரிஸ்டர் பட்டம் பெறுவதற்காக இலண்டனில் மூன்றாண்டுகள் தங்கியிருந்தார். அக்காலத்தில் அங்கு சைவ போசனத்தை தொடர்ந்தும் கடைப்பிடித்திருந்தார். அதன் காரணமாக இலண்டனிலும் சைவ போசன சங்கத்தில் (London Vegetarian Society) உறுப்பினரானார். பின் அச் சங்கத்தின் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இச்சங்கத்தில் அவரது முதலாவது கட்டுரையாக 07.02.1891 ஆந் திகதி இந்திய சைவ போசனவாளர் (Indian Vegetarians) என்ற தலையங்கத்துடன் வெளி வந்தது. இது போன்று எல்லாமாக ஒன்பது கட்டுரைகள் வெளிவந்தன. இந்த அனுபவங்கள் பின்பு கட்டுரைகளை வரைவதற்கும் பத்திரிகையை வெளியிடுவதற்கும் பெரிதும் உதவின.

## தென்னாபிரிக்காவிலும் இந்தியாவிலும் பத்திரிகையாளராக தொண்டு புரிதல்.

காந்தியடிகள் தென்னாபிரிக்காவில் வழக்குத் தொடர்பாக சென்றாலும் அங்கு மக்கள் படும் இன்னல்கள் துன்பங்களைக் கண்டு ஆழ்ந்த கவலையடைந்தார். அவர்கள் முறைப்பாடுகளை கேட்டும், குறைபாடுகளை கண்டும் அவர்களுக்காக போராட வேண்டும் என்ற சிந்தனை எழுந்தது. தென்னாபிரிக்காவில் இருந்து மீண்ட போது இந்தியாவிலும் இதே நிலை எழுந்தது. அவற்றிற்கு அகிம்சை வழியே போராட்டத்திற்கு பொருத்தமானது எனக் கருதி தமது கருத்துக்களை கட்டுரைகளாக பத்திரிகைகளில் வெளியிட்டும் பிரசுரங்களிலும், பேச்சுக்களிலும் கூற ஆரம்பித்தார்.ஆபிரிக்காவில் இருந்து பச்சைக் கையேடு (Green Pamphlet) முதலாவதாக வெளியிட்டார். தொடர்ந்தும் இந்தியாவில் இருந்து வெளிவரும் Time of India, Pioneer Alahabad, The Chennai Standard, The Hindu, The Amirta Bazu Parila, The Sates man ஆகிய பத்திரிகைகளில் பல்வேறு கட்டுரைகளை எழுதி வந்தார். இவற்றில் வெளிவந்த கருத்துக்களை இந்தியாவிலும் வேறு நாட்டு பத்திரிகைகளும் வெளியிட்டன.

அக்காலத்தில் மேடைகளிலும் இவரின் கருத்துக்கள் ஆதாரமாகக் கூறப்பட்டன. 1903 யூன் மாதம் 4 ஆம் திகதி தென்னாபிரிக்காவில் இன வேற்றுமையைக் கண்டித்து ஆழமான கட்டுரைகளை எழுதினார். இப் பத்திரிகைகள் ஆங்கிலம், குஜராத்தி, ஹிந்தி, தமிழ் ஆகிய மொழிகளிலும் வெளிவந்தன. 24.12.1904 ஆம் ஆண்டு முதல் இப்பத்திரிகையை காந்தியடிகள் பொறுப்பேற்ற பின் தென் ஆபிரிக்காவில் இந்திய போனிக்ஸ் குடியிருப்பில் இருந்து வெளியிட்டார். 1919.04.07 ஆம் திகதி சத்திய கிரகா என்ற பத்திரிகைகளையும் காந்தியடிகளை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. அரச துரோகம் எனக் கூறப்படும் சுதந்திரக் கருத்துக்களுக்கு எதிராக ரௌலட் சட்டம் கொண்டு வரப்பட்ட போது அதற்கெதிராக கருத்துக்களை பத்திரிகையின் மூலம் வெளியிட்டார். Bombay Chronicles பத்திரிகைக்கு ஆசிரியராக்கப்பட்டார். ஆனால் பத்திரிகை தடை செய்யப்பட்டது. குஜராத்தி இளைஞர்கள் Young India என்ற பத்திரிகையை ஆரம்பித்து காந்தியடிகளை ஆசிரியராகக் கொண்டு இரண்டு வாரத்திற்கு ஒரு முறை வெளியிட்டனர். இப் பத்திரிகையில் ஆங்கில அரசுக்கு எதிராக எழுதிய கருத்துக்களுக்காக காந்தியடிகள் ஆறு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். இந்தியாவின் ஹரிஜன் (Harijan) பத்திரிகை 01.02.1933 இல் ஆரம்பிக்கப்பட்டும் 1939 இல் அரசினால் தடை செய்யப்பட்டது. இப்பத்திரிகையில் பிரதானமாக அஹிம்சை பற்றிய கருத்தக்களும் சுதந்திரம் பற்றிய விழிப்புணர்வுகளும் கடையவர்களின் நலன்பற்றிய கருத்துக்களும் வெளியாகின. 1912 ஆம் ஆண்டு இதற்காக காந்தியடிகள் கைது செய்யப்பட்டும் பத்திரிகைகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. பின் 1946 ஆம் ஆண்டில் மீண்டும் வெளிவந்தன. பத்திரிகையை வெளியிடுவதற்காக அச்சிடுதல், அனுப்புதல், வரவு செலவு பார்த்தல் போன்ற எல்லாக் கடமைகளிலும் காந்தியடிகள் ஈடுபட்டு செயற்பட்டார்.

மக்களுக்காக பத்திரிகை வாயிலாக அஹிம்சை வழியில் சுதந்திர உணர்வூட்டுவதும் வன்முறைகளை தவிர்ப்பதும், இன ஒற்றுமையை வளர்ப்பதும் சாதி பாகுபாட்டை தகர்ப்பதும், வகுப்பு ஏற்றத்தாழ்வை நீக்குவதும் பிரதான நோக்கங்களாக காணப்பட்டன. மக்களின் ஏழ்மையை நீக்குவதற்காக கிராமிய பொருளாதாரத்தை வளர்க்கும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. பெண்ணிய சமத்துவம், சாதிச் சமத்துவம், பொருளாதாரத்தில் சமத்துவம், கல்வியில் சமத்துவம், அடிப்படை மனித உரிமைகள் சமூக சீர்திருத்தங்கள் – மதுவிலக்கு போன்றவை கல்வி, விவசாயம், சுகாதாரம், குடிசைக் கைத்தொழில் ஆகியவற்றை மேம்படுத்தி வளமான இந்தியாவைக் காண முடியும் என திடசங்கர்ப்பம் பூண்டு செயற்பட்டார்.

**அபிஷா யோகசிங்கம்**
**கம்சாயினி விஜயசேகர்**
**யா/உடுவில் மகளிர் கல்லூரி**
**G.C.E A/L 2023 கலைப்பிரிவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்மார்க்க நெறியே அண்ணலின் சமயவழி

சத்தி யத்தைத் தேவ னாகச்
சதா தொழுகை செய் தனை
சஞ் சலமுஞ் சாவும் நோவும்
சூழா மல் தடுத் தனை
சத்தெனுஞ் செம் பொருளைக் காண
சத்திய நெறியில் தவழ்ந் தனை
சனத் திடையே சமத் துவஞ்
செழித் திடவே மொழிந் தனை
சிந்த மெங்கும் நிறைந் திருந்த
தியா கத் தீபச் சுடர்
தேவ சன்னி தானத் தில்
துலங் கிடவே வைத் தனை
உத்தம மான பரம் பொருளை
உள மகிழக் காணும் மட்டும்
உறுதி யுடன் நின்றே புது
உணர்வு மலர வாழ்ந் தனை

சன் மார்க்க நெறி யேயுன்
சமய வழியென்று சாற் றினை
சயம விரோதக் கும்பல் தனைச்
சால்பு கொண்டே தாக் கினை
அன்புடை மையால் அற வளர்த்து
அறத் தினால் மறமொழித் தனை
தம்மதம் ஏற்ற மென் றவரின்
மத வெறியை மழுங்கடித் தனை
முன் னோனை வழிபடு முறைமையை
மக்கட் கண் பதியவைத் தனை
மதங்கள் மறு மலர்ச்சி யெய்த
முழு மூச்சுடன் முன்னின் றனை
வன் கொடுமை மூடபக்தியால் மதம்
வசைக் குளானதைக் கண்டித் தனை
வஞ் சித்தல் கெடுத்தலால் விளைந்த
வாமப் பெயரழிவை விலக் கினை.

*கவிஞர் மணிமன்றன்,*
*யாழ்ப்பாணம்*


# குழந்தைகளுக்கு காந்தி

## நூல் அறிமுகம்

மகாத்மா காந்தியின் உன்னதமான வரலாற்றை குழந்தைகளும் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் எளிய நடையில் இந்த நூல் எழுதப்பட்டு இருக்கிறது. நூலின் இறுதிப் பகுதியில் மகாத்மாவை அறிந்து கொள்வோம் என்று வினா – விடை வடிவில் தகவல்களைத் தந்து இருப்பதைப் பாராட்டலாம்.

ஆசிரியர்: சு. குழந்தைசாமி
காந்தி அமைதி நிறுவனம்

# 153 ஆவது காந்தி ஜெயந்தி



மகாத்மா காந்தியடிகளின் 153ஆவது பிறந்த தினம் இன்று (02.10.2022) கொண்டாடப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் யாழ் இந்திய துணைத் தூதரகத்துடன் இணைத்து காந்தி ஜெயந்தி தினத்தை அனுஷ்டிக்கின்றது. யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள காந்தி சிலைகளுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்படும். பிரதான நிகழ்வு யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள காந்தி உருவச் சிலையடியில் (காகில்ஸ் சதுக்கம்) இடம்பெறும். அங்கு "காந்தீயம்" பத்திரிகையும் வெளியிட்டு வைக்கப்படும்.

இதே வேளை கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்திலும் (சிறுவர் இல்லம்) காந்தி ஜெயந்தி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. ஜெயந்தி நிகழ்வுகள் கி. விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளன. அத்துடன் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டும் அங்கு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# யாழ்ப்பாண முதல்வருக்கு காந்திசேவா சங்கத் தலைவரின் மடல்

## "தமிழ்ச் சமூகத்திற்கு வலுவுள்ள ஆன்மீகத் தலைவர் தேவை" என்ற யாழ் முதல்வரின் கருத்துக்கு காந்திசேவா சங்கத் தலைவரின் பதில்

தாங்கள் கூறியதை பத்திரிகை மூலமாக அறிந்து கொண்டோம். நல்ல சிந்தனை! ஆன்மீகத்தலைவரோடு தேசியத் தலைவரும் தேவை. மகாத்மா காந்தியடிகள் ஆன்மீகத் தலைவராகவும் தேசியத் தலைவராகவும் மக்களுக்குச் சேவை செய்தார். இவருடைய சீடர் வினோபா அடிகளும் ஆசிரமம் அமைத்து சிறந்த சேவை செய்தார். இவர்கள் எங்களுக்கு வழிகாட்டியாக இருக்கின்றனர். ஆகவே அவர்களுடைய வழியில் ஆசிரமம் அமைத்து செயலாற்றுவது சிரமமாக இருக்காது. அறிவியல் வேகமாக வளர்ந்து கொண்டே போகிறது. இதனை கட்டுப்படுத்தா திருந்தால் உலகம் பேரழிவை சந்திக்க நேரிடும். ஆன்மீகவியல் மூலமே அறிவியலைக் கட்டுப்படுத்த முடியும்.

தங்களுக்கு வசதி இருந்தால் இங்கு மகாத்மா காந்தி ஆசிரமம் (பிருந்தாவனம் சிவபுரம், பூநகரி) வருகை தந்து பார்வையிடலாம். தங்களைச் சந்திக்குமாறு "காந்தீயம்" ஆசிரியர் திரு.எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி அவர்களுக்கு அறிவித்துள்ளோம். அவருடைய தொலைபேசி: 077 6624377 தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகின்றோம். வாழ்க.

அன்புள்ள
சோ.க. தம்பிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதநாடு பெற்றெடுத்த உத்தமர் மகாத்மா காந்தி

## (02.10.1869 - 30.01.1948)

- க. செல்வக்குமாரன் M.A
ஓய்வு நிலை அதிபர்,(கந்தரோடை)

எவரும் எதிர்பாராத விதமாக இந்திய விடுதலைப் போராட்டத்தை அகிம்சையை ஆயுதமாக ஏந்தி வெற்றிகண்ட செயல்வீரன் மகாத்மா காந்தியடிகள். காந்தியடிகள் மறைந்தபின்பே உலக மக்கள் அவரது கொள்கைகளான அகிம்சை , சத்தியம் , உண்மை சகல மதமும் சமம், சகல மக்களும் சமம் முதலியவற்றாலும் அவரது எளிமை, சிக்கனம் , தன்னம்பிக்கை, விடாமுயற்சி, தொழில் மகத்துவத்தை மதித்தல், இறைநம்பிக்கை என்பனவும் காரணமாகவும் உலக மக்கள் அவரைப்பற்றியும், அவரது செயற்பாடுகளையும் அதிகமாக அறிய முற்பட்டனர். பின்பற்றவும் ஆரம்பித்தனர். தான் வாழ்ந்த காலத்தில் சமூகத்தில் பல வகிபாகங்களை வகித்தவர். ஒரு வக்கீல் (சட்டத்தரணி –பரீஸ்டர்), அரசியல்வாதி, தத்தவியலாளர், சமாதான செயற்பாட்டாளர், ஆசிரியர், ஆய்வாளர், செருப்புக் கட்டுபவர், பத்திரிகை ஆசிரியர், நூல் ஆசிரியர், ஆன்மீக வாதி, தோட்டி, கட்டுரையாளர் என இன்னும் பலவாகும்.

காந்தியடிகளைப் பற்றி 25,000 இற்கும் மேற்பட்ட நூல்கள் பல்வேறு மொழிகளிலும் வெளியிடப்பட்டன. காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், காந்திய கொள்கை விளக்கநூல்கள், சித்திரக்கதைகள், கவிதைகள், நாடகங்கள், திரைப்படங்கள், இறுவெட்டுக்கள் , மொழி பெயர்ப்பு நூல்கள் என பல்வேறு வகையான நூல்கள் உள்ளடங்குகின்றன. காந்தியடிகளின் மறைவுக்குப் பின் இந்தியா இலங்கை உட்பட உலகநாடுகளில் அந்த நாட்டு மக்கள் காந்தியடிகளின் மேன்மையான செயற்பாடுகளை தன்னலமற்று செய்ததை நன்றி கூறும் விதமாகவும் நினைவு கூரும் விதமாகவும் காந்தியடிகளின் சிலைகளை அமைத்தனர், வீதிகள் ,கிராமங்கள், மண்டபங்கள் முதலியவற்றிற்கு காந்தியடிகளின் பெயரைச் சூட்டினர். உருவப்படங்களை அலுவலகங்கள், மண்டபங்களில் தொங்க விட்டு அஞ்சலி செலுத்துகின்றனர். காந்தியடிகளின் பொன்மொழிகளை பொது இடங்களில் காண முடிகிறது. காந்தியடிகள் கூறிய விடயங்கள் (சொற்கள்) 100 பெரிய தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவ்வளவு பெருமைகளை கொண்ட மகாத்மாவை பலர் தெய்வமாக கருதினர்.

கற்றோர், கல்லாதோர், ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடுகள் இன்றி "மகாத்மா" என்று மதிப்புடன் அழைக்கின்றனர். காந்தியடிகளை "பாபு" என்றும் (குஜராத் மொழியில் பாபு என்பதன் பொருள் தந்தை) அழைத்தனர். மேலும் " இந்திய நாட்டின் தந்தை" (தேசபிதா) என்றும் அழைக்கப்பட்டார். சர்வதேச நாடுகளும் தலைவர்களும் இவரது அகிம்சை கொள்கையை அங்கீகரித்ததுடன் காந்தியடிகள் பிறந்த தினமான அக்ரோபர் 02 ஆந் திகதியை ஐக்கிய நாடுகள் சபையில் சர்வதேச அகிம்சை தினமாக பிரகடனப்படுத்தி இன்று வருடந்தோறும் இது ஒரு தேசிய விழாவாக அங்கத்தவ நாடுகளினால் கொண்டாடப்படுகிறது. காந்தியடிகளுக்கு இறந்தபின் நோபல் பரிசு வழங்கு வதற்கு எத்தனித்த போது அவர் தனக்கென வாரிசுகளின் பெயரை எழுதி வைக்காத தன் காரணமாக அது வழங்கப்படவில்லை. காந்தியடிகள் பிறந்த அக்ரோபர் 02 ஆந் திகதி இந்தியாவின் தேசிய விடுமுறையாக உள்ளது.


எம்மால் போற்றப்படும் உத்தமரின் பிறந்த இடம், மாநிலம், குடும்பம், பிறப்பு, கல்வி , தொழில் தென் ஆபிரிக்காவிலும் இந்தியாவிலும் மேற்கொண்ட செயற்பாடுகள் அவரது இறுதிக்காலம் என்பவற்றை தொடர்கட்டுரையாக வழங்குவதற்கு காந்தியடிகளின் ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

### காந்தியடிகள் பிறந்த மாநிலத்தின் சிறப்பு

இவர் குஜராத் மாநிலத்தில் 02.10.1869 ஆந் திகதி பிறந்தார். இந்த மாநிலத்திற்கு குஜராத் என்ற பெயர் வரக்காரணம் இங்கு முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த Gujjars குஜார்ஸ் என அழைக்கப்பட்ட பழங்குடி மக்கள் வாழ்ந்தமையாகும்.

இந்திய சுதந்திரம் கிடைத்தாலும் அப்போது 562 மன்னர்களின் தனி இராச்சிய பிரிவுகள் காணப்பட்டன. அவற்றை சர்தார் பட்டேல் மன்னர்களின் சம்மத்துடன் ஒன்றாக இணைத்து "இந்தியா" என்ற இந்திய குடியரசை உருவாக்க உழைத்து வெற்றி கண்டவர்.

இந்த கடினமான பணியை மேற்கொண்ட காந்தியவாதியும் பதில்




மகாத்மா காந்தி பிறந்த இடமான குஜராத் மாநிலம்


பிரதமருமான தலைவருமான வல்லபாய் பட்டேலுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக அவரின் உருவச்சிலை நிறுவப்பட்டது. உயரம் 182 மீற்றர் ஏற்பட்ட செலவு 3000 கோடி ரூபா.

இந்தியாவில் உள்ள 33 மாநிலங்களில் இதுவும் ஒன்றாகும். இந்தியாவின் வடமேற்குப் பக்கமாக காணப்படுகிறது. 1960 இற்கு முன் இது வடமேற்கு மாநிலம் என கருதப்பட்டது. வரலாற்றுக் காலத்தில் Gurjaratra or Gurjarabhumi என அழைக்கப்பட்டது. 01.05.1960 ஆந் திகதி குஜராத் மாநிலம் உருவாக்கப்பட்டது. பம்பாய் மாகாணத்தின் ஒரு பகுதியும் மகாரஷ்டிராவின் ஒரு பகுதியும் சேர்க்கப்பட்டு ஒரே மாநிலமாக உருவானது. இந்திய மாநிலங்கள் மொழி அடிப்படையிலும் பிரிக்கப்பட்டிருந்தன. 1600km நீளமான கடற்கரை காணப்படுகின்றது. சிறந்த உப்பு விளையு மிடங்களும் உள்ளன. இந்த மாநிலத்தின் வடக்காக நர்மதா நதி பாய்கிறது. வடகிழக்கு எல்லையாக ராஜஸ்தான், டட்றா, நாகா ஹவலி டடமன், டியூ ஆகியவையும், தெற்கெல்லையாக மகாராஸ்டிராவும் மேற்கெல்லைகளாக அரேபிய கடலும், பாக்கிஸ்தானின் சிந்து மாகாணமும் காணப்படுகின்றன. இதன் நிலப்பரப்பு 196024 சதுர கி.மீ. **தலைநகராக காந்திநகர்** விளங்குகிறது. மக்கள் தொகை 60439692 .இந்தியாவில் மக்கள் தொகை கூடிய மாநிலங்களில் ஒன்பதாவது இடத்தை வகிக்கின்றது. ஆனால் ஐந்தாவது பெரிய மாநிலமாக விளங்குகிறது. இங்குள்ள பெரிய நகரம் அகமதாபாத் ஆகும். உள்நாட்டு மொழியாகவும் உள்நாட்டு அரச மொழியாகவும் இருப்பது குஜராத்தி எனினும் ஆங்கிலம், ஹிந்தி, மராட்டி அரபு, உட்பட இன்னும் பல மொழிகள் பேசப்படுகின்றன.

சமய பன்மியமும் காணப்படுகிறது. இந்து சமயமும் அதன் பிரிவான வைணவ சமயமும், புத்த சமயம், இஸ்லாம், கிறிஸ்தவம், பாசி, சமணம் என்பன பிரதான சமயங்களாகவும் வேறு சமயங்களும் உள்ளன. சமய நம்பிக்கை கொண்ட மக்களாகவுள்ளனர். எல்லா சமயத்தவர்களும் வழிபடும் ஆலயங்கள், தேவாலயங் கள் என்பன எழில்மிகு கலை அம்சத்துடன் காணப்படுகிறது.

அடுத்த இதழில் தொடரும்....

**அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பணிகளுக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் சங்கத்தின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி உதவுக.**



அகில இலங்கை காந்தி சேவா சங்கம்
சேமிப்புக் கணக்கு இலக்கம் : 1117599
இலங்கை வங்கி
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை D8 உருத்திரபுரம், கிளிநொச்சியிலுள்ள அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக திரு. சோ. க. தம்பிப்பிள்ளை அவர்களால்
யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதி, இலக்கம் 717இல் அமைந்துள்ள **தீபம் பதிப்பகத்தில்** 2022 ஆம் ஆண்டு அக்டோபர் **மாதம் 02 ஆம் திகதி** அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இதழாசிரியர் : எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி B.F.A, PGDE, Dip.in Community Development& Management, Certificate in Human Rights, M.A(Gandhian Thought), M.Ed

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org